தமிழ்ச் சிட்டு

தனித் தமிழ்ச் சிறுவர் கலை இதழ்

குரல்: 5

இசை: 10-11

விலை: 25 காசு.

மனத்தில், அறிவில் ஒளி ஏற்றுவாய்!

நின்ற இடத்திலேயே
நின்றுகொண் டிராதே!
நெடிய உலகத்தைச்
சென்றுபார்! — உன்
குடியை யமர்த்தியங்கு
வாழ்ந்துபார்! — பல
குன்றுண்டு; மலையுண்டு;
காடுண்டு; கடலுண்டு;
குனிந்து, நிமிர்ந்து, நடந்
தோடுவாய்! — உயிர்க்
குலங்கள் வாழ்கவெனப்
பாடுவாய்!

சென்ற தடத்திலேயே
சென்றுகொண் டிராதே!
சேற்றில் சகதியினில்
நடந்துபார்! — முள்
சிரிக்கும் கரும்புதருள்
நுழைந்துபார்! — பெருஞ்
சிறப்புண்டு; இழிவுண்டு;
சிதைவுண்டு; புதைவுண்டு;
சிரித்தும் அழுதும், உயிர்
தேம்புவாய்! — துயர்
சுவைத்திவ் வுலகநலம்
ஓம்புவாய்!

தின்ற பொருள்களையே
தின்றுகொண் டிராதே!
தெவிட்டும் பொருள்களையும்
உண்டுபார்! — உன்
தீனிப் பைக்கும், கசப்
பீந்துபார்! — இலை
தழையுண்டு; பிஞ்சுண்டு;
காயுண்டு; கனியுண்டு!
தினைத்துச் சுவைத்து, உனைத்
தேற்றுவாய்! — மனந்
தெளிய அறிவில், ஒளி
ஏற்றுவாய்!

வாழ்க்கையில் பீடு சேர்!

இன்பத்தை யே,நாடி
ஏற்றத்தை யே,தேடி
ஏங்கிக் கலங்காதே பாரில்!-அக்கால்
இயற்கை விளங்காது நேரில்!-பெருந்
துன்பத்தையும் நாடு!
துயரத்தையும் தேடு!
தொல்லையை யும் சுவை பார்ப்பாய்!-வருந்
துன்பமும் இன்பமென் ருர்ப்பாய்!

குன்றுக்கு மேலேயே
கொண்டையத் துச்சிக்கே
சென்று வரல் ஒரு நேரம்-மலை
சேருவ தே,அன்று வீரம்!-நீ
நின்ற நிலத்துக்கு
நேராக — கீழாக
நெட்டை நெடுங்குழி தோண்டு-உள்
நெருப்புக் குழம்பையுந் தாண்டு!

உண்ணும் உணவுக்கும்
உறங்கும் உறக்கத்தும்
ஓயா தலைவதோ வாழ்க்கை?—ஓர்
எறும்புக்கும் உண்டந்தப் பூழ்க்கை!-நின்
எண்ணுந் திறனுக்கும்
ஏற்ற வலிமைக்கும்
என்னதான் உண்டுகொல் பீடு?—உயிர்
ஏகின பின்சுடு காடு !

விசும்பை அளாவிடு!
விண்ணை அளந்திடு!
வெட்ட வெளியினில் கால்வை!-கை
வீசி நடத்திடு வாழ்வை!—ஒரு
பசும்புல்லின் வேருக்குள்
பறவையின் இறக்கைக்குள்
பார்வையை-எண்ணத்தை நீ,வை-பெரும்
பாட்டில் நனைத்திடு நாவை!

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம் !
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்–5. | தி. பி. | ௨௦௦௨ | நளி-சிலை-நவ-திச–71 | இசை 10–11

‘அறியாமை’ எங்குளது?

“அறிவு” குடி கொண்டிருக்கும் இடத்திலெல்லாம் ‘அறியாமை’ அதன் நிழல் போல் படிந்திருக்கின்றது. ஒளிக்கு நேர் எதிர்ப்புறத்தில் ஒவ்வொரு பொருளின் பக்கவாட்டிலும் ‘அறியாமை’ தலை சாய்த்துப் படுத்திருக்கின்றது. பூக்களைச் சுற்றியுள்ள இலைகள் போலும், மூளையைச் சுற்றியுள்ள கனத்த மண்டையோட்டினைப் போலும், அதன்மேல் அடர்ந்து வளர்ந்து கிடக்கும் மயிர்த்திரட்சியைப் போலும், அறியாமை இவ்வுலகப் பொருள்களை அடைகாத்துக் கொண்டுள்ளது. அறியாமை அறிவுக்கு முதுகு! அதை மூடி மூடித் திறந்து காட்டும் இமை! அறியாமையை மூடிப் புதைக்கும் பொழுது, அறிவு உயிர் பெற்று எழுகின்றது! அறிவு விழிக்கையில் அது தூங்கப் போகின்றது. தேங்காயின் ஓடு போலவும் அதைச் சுற்றி இறுகிப் பொதிந்து கிடக்கும் நார்போலவும், முந்திரிப் பருப்பை மூடிய வலிந்த கொட்டை போலும், அறிவை மூடிப் பொதிந்து காக்கின்றது அறியாமை!

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்
தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1. தமிழகம்.

'அறியாமை' இல்லாத இடம் இல்லை! அதன் கை படாத பொருளுமில்லை. எல்லா உயிர்களின் கருப்பைகளிலேயே அதுவும் கருக் கொள்கின்றது. அவ்வுயிர்கள் பிறக்கும்போது அதுவும் கூடவே இணைந்து பிறக்கின்றது. அவை வளர வளர அதுவும் வளர்கிறது; அவற்றின் மடிவு வரை அதுவும் மடிவதில்லை. அவற்றின் உடல் மட்கி மண்ணாகும் பொழுது, அதுவும் மண்ணாகி, மீண்டும் உருக்கொண்டு உயிர்களைச் சேர்கின்றது. அறிவு அழியாதது; அறியாமையும் அழிவற்றது.

ஒளிக்குள் ஒளியாயும் நிழலுக்குள் நிழலாயும் அது வடிவங் கொள்கின்றது. அறிவு நாடகத்திற்கு அறியாமைதான் முன்னுரை சாற்றுகின்றது; பின் முடிவுரை சாற்றி அந் நாடகத்தை திரையிட்டு மூடுகின்றது. அறிவு சக்கரமாகிச் சுழலும் பொழுது, அறியாமை அதன் ஆரக்கால்களாக விருந்து அதைச் சுற்றுகின்றது. கடல்நீர் மேலெழும்பிச் சுருண்டு அலைகளாக உருள்கையில் அறியாமை அவற்றின் உட்புகுந்து புரள்கின்றது.

அறியாமைக்கும் அறிவுக்கும் இடையில் நடையிட்டுத் திரிவதே மனம்! மனத்தை அறிவு கவ்வும் பொழுது, அறியாமை மூளையைக் கவ்வுகின்றது! அறிவு மூளைக்குக் குடியேறும் பொழுது, அறியாமை தன் குடும்பத்துடன் மன வீட்டில் குடி புகுகின்றது. எப்படியும் எங்கும் அறியாமை அறிவு வாழும் வீட்டின் எதிர்வீட்டில் தன்னைக் குடி யமர்த்திக் கொள்கின்றது, அறிவுக்கு எதிராய் நின்று செயல்படுகின் றது, அது. அறிவுப் பேச்சின் ஒவ்வொரு சொல்லுக்கும் முன்னும் பின்னும் அறியாமை இடைவெளியாகி நிற்கின்றது. ஒவ்வொரு சொல் தொடருக்கும் நடுவிலும் முடிவிலும், அறியாமை காற் புள்ளியாகவும், அரைப்புள்ளியாகவும், முக்காற் புள்ளியாகவும், முற்றுப்புள்ளியாகவும் அறிவை இடை மறிக்கின்றது. அறிவு வரை யும் ஒவ்வோர் எழுத்தின் கோடுகளின் பக்கவாட்டிலும், சுழிகளின் உட்புறத்திலும் புள்ளிகளைச் சுற்றியும் அறியாமை வெற்றிடத்தைப் பரப்பி வைக்கின்றது. விசும்பினிடையில் ஆங்காங்கே சிதர்ந்து ஊடாடிக் கிடக்கும் கோள்களுக்கும், உடுக்களுக்கும் இடையில் உள்ள வெற்றிடங்களை முழுவதும் அறியாமை கட்டியாள்கின்றது,

அறிவுக்குக் கரைகளாக அறியாமை அமைந்து, அதன் ஆட்சியை எல்லைமீறாமல் கட்டுப்படுத்துகின்றது. அறிவு தன்னைத் தானே அழித்துக் கொள்ளும் பொழுது அறியாமை அதற்குத் தூக்குக்

கயிறாக இருந்து அதன் கழுத்தை இறுக்குகின்றது. அறியாமை அறிவுக்கு முன்பிறந்து, அதற்குப் பின்னே இறக்கின்றது. உடன் பிறப்பில் அறிவுக்கு அண்ணன் அறியாமை!

'எல்லாவற்றையும் அறிந்துள்ளேன்' என்பவனின் விலாப் புறத்தில் நின்று அறியாமை சிரிக்கின்றது. அறிவு தோலாகி நின்றால் அறியாமை அதன் உட்பொதிந்து நுண்ணுறுப்பாக அமைந்து கிடக்கின்றது. இயற்கையென்னும் தாய்க்கு ஒட்டிப்பிறந்த இரட்டைப் பிள்ளைகளே அறியாமையும் அறிவும்! அவற்றை வேறு வேருக்க முடிவதில்லை.

அறிவு பண்ணாக நின்று இசையாக எழுச்சி பெறுகையில், அறியாமை தாளமாகி நின்று அதற்குக் கவர்ச்சியை உண்டாக்குகின்றது. அறிவு ஒருவனை சாக்கிடங்குக்கு அழைத்துச் செல்கையில், அறியாமை அவனுக்குக் குழி பறிக்கின்றது. அறிவு ஒருவனை மண வறைக்கு இட்டுச் செல்கையில், அறியாமை அவன் புலன்களோடு ஒட்டி உள்ளே சென்று, அவனுக்குப் படுக்கை விரிக்கின்றது. அறிவு ஒருவனைப் புகழ் மேடைக்குத் தூக்கிப் போகையில், அறியாமை அவனுக்கு மாலையாக வந்து கழுத்தில் விழுகின்றது. அவன் அங்கு நின்று பேச முற்படுகையில், உணர்ச்சியாக வந்து அவன் தொண்டைக்குழியை அடைக்கின்றது.

அறிவை அறிய விரும்பாதவர்களிடத்தில் அது தொடங்கி, அதை அறிந்தவர்களிடத்தில் அஃது ஊடுருவி, அதைக் கடந்தவர்களிடத்தில் அது முற்றுப் பெறுகின்றது. அறியாமை, அறிஞர்களின் விரும்பத் தகாத பிள்ளை! மூடர்களின் செல்லப் பிள்ளை!

—பெருஞ்சித்திரன்.

ஒரு மடல்!.

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம், தமிழ்ச்சிட்டில் வரும் பாடல்கள், கதைகள் மற்றும் பயன்மொழிகள் யாவும் மாணவர்கள் மட்டுமின்றிப் பெரியவர்களும் படித்துப் பயனடைய வேண்டிய பகுதிகளாகும். எனக்கு ஓர் ஏக்கம். என் பள்ளிப்பருவத்தில் தமிழ்ச்சிட்டு, தென்மொழி போன்ற நூல்களைப் படிக்கும் வாய்ப்பு இல்லை. இருப்பினும் வருங் காலத்தில் நம் மக்களுக்காவது பயன்படும் என்று 'தமிழ்ச்சிட்டு' அனைத்தையும் பெரிய பொத்தக அளவில் கட்டடம் போட்டுக் காத்து வைத்துள்ளேன். வளர்க தங்களின் தமிழ்த் தொண்டு!

—ப. தங்கவேல் - மைசூர்.



காலை மலரும்முன்
கண்மலர்ந்த நற்கழுதை
வாலை மெதுவாக
வல்லரிமா தன்னுடல்மேல்
நீவிக் கொடுக்க,
நெடுந்தூக்கம் தான்களைந்து,
தாவி எழுந்துநிற்கத்
தன்காலை ஊன்றியதும்
பொத்தென்று மீண்டும்
பொதிபோல வீழ்ந்ததுவாம்!
மெத்தென்(று) இலைதழைகள்
மேவி யிருந்ததினால்
ஒன்றும் அடியில்லை!
உள்ளம் பதறிடவே
நின்ற கழுதையம்மை
நீள நினைத்துப்பின்
தக்கதென ஓர்முடிவைத்
தான்தேர்ந்து, வல்லரிமா
பக்கம் அமர்ந்து
பணிவாக "ஐயாவே!
எப்படியும் உங்கள்
இருப்பிடத்திற் கேகுவதே
இப்பொழுது தக்கதென
எண்ணுகின்றேன்; நீங்களிதைத்

தப்பென்று கொள்ளாமல்
தக்கதென்றே எண்ணி,மனம்
ஒப்புவிரேல் நானென்(று)
உரைக்க விரும்புகின்றேன்...''
—என்றே கழுதையம்மை
ஏறெடுத்துப் பார்த்திருக்க,
''நன்(று);அதனை நீயும்
நவில்''-என்றே வல்லரிமா
ஒப்பியதும், நற்கழுதை
உள்ளம் நெகிழ்ந்ததுவாய்ச்
செப்பியது: ''நீங்களிந்தச்
சின்னக் கழுதையின்
வல்முதுகின் மேலேறி
வாகாய் அமர்ந்துகொண்டு
செல்கின்ற பாதையினைச்
செப்பமுறக் காட்டுவிரேல்
எத்தனைக்கல் என்றாலும்
இன்பமெனச் செல்வேன்,யான்!
ஒத்ததுங்கள் உள்ளமெனில்
'உம்'மென்று சொல்லுங்கள்''

—என்றே கழுதை
இரக்கமொடு கேட்டதுவே!

வென்றுநின்ற பேரன்பால்
வெள்ளிமுக் குக்கழுதை
வல்லரிமா நெஞ்சத்தில்
வானளவாய்த் தானுயர்ந்து
சொல்லரிய பேருருவாய்த்
தோன்றிச் சுடர்வீசி
நின்றதனை யாரறிவார்?
நேயத்தை யாருரைப்பார்?
ஒன்றும் மறுப்பிலதாய்
'உம்'மென் றிசைந்ததது!

மாக்களுடை வேந்தன்
மனமிசைந்த நோக்குணர்ந்தே
ஊக்கமுற்ற பெண்கழுதை
முன்போய் உடல்தாழ்த்தி
முக்கி முனகி
முயன்று முதுகேற்றித்
தக்கபடி காலூன்றித்
தானெழுந்து நின்றதுவே!

வல்விலங்குக் கூட்டமெல்லாம்
வால்மடக்கித் தாம்வணங்கும்
கொல்விலங்கை — கூற்றின்
கொடிய விலங்கரசைப்
பெட்டைக் கழுதையொன்று
பேரன்பால் வீறடக்கிக்
கட்டிவைத்த மூட்டையைப்போல்
காற்றடைத்த தோலேபோல்
வல்முதுகில் ஏற்றி
வழிநடந்த காட்சியினைக்
கல்முழையுள் முட்புதருள்
கண்ட முயலினங்கள்,
கோட்டுக் குரக்கினங்கள்,
குள்ள நரியினங்கள்
காட்டெருமைக் கூட்டங்கள்,
கால்நெடிய மானினங்கள்,
வான்பறவைக் கூட்டம்—எலாம்
வாயடங்கி மெய்யடங்கிக்
கூனிக் குறுகிநின்று
கூர்த்தவிழி மூடாமல்
பார்த்து வியப்புற்றுப்
பாதையிடை நில்லாமல்,
சேர்த்தொன்றை யொன்று
சிறகாலும் காலாலும்
கட்டித் தழுவிக்
கதிகலங்கி நின்றிருந்த!

நமது உடல்...!

0 நாம் ஒரு சொல்லைப் பேசுவதற்கு 72 தசைகள் இயங்க வேண்டும்.

0 நாம் சினமுறும்போது 50 தசைகளும், சிரிக்கும்போது 13 தசைகளும் இயங்கும்.

0 மாந்தன் உணவு உண்டபின் இருக்கும் எடையை விட உண வுண்ணாத போதே மிகுந்த எடையுள்ளவனாயிருப்பான்.

0 உடலிலுள்ள வெயர்வைத் துளைகளையெல்லாம் அடைத்து விட்டால், 5 மணி நேரத்தில் மாந்தன் இறந்து விடுவான்.

0 பிட்யூட்ரிச்சுரப்பிசரியாக இருந்தால் உயரமாக வளர்வோம்; தைராய்டுசுரப்பி சரியாக வேலைசெய்யாவிடின் உடல் வளர்ச்சியும் குன்றும்; அறிவு வளர்ச்சியும் குன்றும்.

0 குளிர் நீரில் குளிக்கும்போது தோலும் தோலடியில் உள்ள குருதிக்குழாய்களும் [அரத்தக்குழாய்] சுருங்குகின்றன. இதனால் குருதி மற்றைய பகுதிகளில் நன்கு பாயும். வெந்நீரில் குளிக்கும் போது தோலிலுள்ள நுண்துளைகள் விரிவடையும்; எனவே நீர் அங்குத் தங்கும்; நீர்க்கோவை உண்டாகும்.

0 மூளைக்குத் தேவையான உயிர்வளியின் அளவு குறையும் பொழுது, மூளை போதுமான உயிர்வளியைப்பெற, சில நரம்புகளைத் தூண்டி விட்டு, வாயைத் திறக்கச் செய்யும்; இதனால் தேவையான வளி உட்புகுகிறது. இதுவே கொட்டாவி.

0 உணவொடு உள்ளே சென்ற காற்று வெளியேறி, வயிற்றில் உணவுக்கு இடம் தரவேண்டும். அதனால் வாய் வழியே, உட் சென்ற காற்று வெளியேறுகிறது; அதுவே 'ஏப்பம்'.

-நா. கனகராசன்-

[6-ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆண்டு பலவாய்
அழுக்குத் துணிகளையே
வேண்டுமட்டில் ஏற்றிவைக்க
வீட்டிற்கும் ஆற்றிற்கும்
மெத்தச் சுமந்துழைத்து
மேனியெலாம் கூசிநின்ற
சொத்தைச் சுவைக்கே
அரிமாவைத் தான்சுமக்கும்
பீடுற்ற இன்பத்தைப்
பேசி முடிவதுண்டோ? –1065
ஈடற்ற தன்னிறைவால்
ஏகிற்றே பெண்கழுதை! (—தொடரும்)

பேரறிஞர் பெர்னார்டுசா

வேலம்பட்டி: நா. மதிவாணன் (நா. கனகராசன்)

அறிவியல்-இலக்கியம் இவ்விரண்டுமே மாந்தனின் அறிவுக் கண்கள். அறிவியலையும்-இலக்கியத்தையும் தீய வழிகளில் பயன் படுத்தும் மூடருமுளர்! ஆனால் அறிவியலோ இலக்கியமோ கெடுவ தில்லை; தீய வழியில் பயன்படுத்துவோரே குற்றவாளிகள். இலக் கியம் அகவாழ்வைப் பண்படுத்துகிறது; அறிவியல் புறவாழ்வின் தேவைகளைக் கொடுக்கிறது. உள்ளத்தை உருக்கும் துன்பவியல் இலக்கியமுண்டு; நல்லதை-அறத்தை-எடுத்துக் கூறி-நன்மையை நிலைநாட்டும் இலக்கியமுண்டு. ஆணித்தரமான புரட்சிக் கருத்துக் களை, நகைச்சுவையாக எடுத்துக்கூறி உள்ளத்தில் கருத்தெழுச் சியை வளர்க்கும் இலக்கியமுண்டு. அவ்வழியில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் எண்ணிறந்த நாடகங்களை எழுதிக் குவித்து மக்களின் அறிவுக்கண்களைத் திறந்தவர்-அறிவொளியைப் பரப்பியவர் பேரறிஞர் பெர்னார்டுசா.

அயர்லாந்தின் தலைநகரான தப்ளின் நகரில் 1856-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 26-ஆம் நாள் பெர்னார்டுசா பிறந்தார். அவர் பிறந்த குடி செல்வம் படைத்ததாகவோ-வறுமையில் வாடிய தாகவோ இருக்கவில்லை. பெர்னார்டுசாவோடு உடன் பிறந்தோர் இரு சிறுமியர்கள். கடைசிப் பிள்ளையே பெர்னார்டுசா. சாவின் தாய் தீயெண்ணங்களுக்கு இடந் தாராத பெண்மணி. தந்தையோ குடிப்பழக்கம் மிகுந்தவராக இருந்தாலும் நல்வாழ்வில் நாட்டம் கொண்டவர். சாவின் தாய் இசைப்பயிற்சியில் திறமை பெற்றிருந் தார். எனவே இசையாசிரியர் 'லீ' என்பவரின் குடும்பத்தோடு பெர்னார்டுசாவின் குடும்பம் நட்புக் கொண்டிருந்தது. இதனால் பெர் னார்டுசாவும் இசைப் பயிற்சி பெற்றார். பெர்னார்டுசா இளமையில்

கல்விப் பயிற்சி பெறவில்லை; அது போலவே குழுகாயத்திலும் பங்கெடுத்துக் கொள்ளவில்லை.

ஏழ்மைத் துன்பத்தால் பெர்னாட்டுசா வாடிய போதும் கை நீட்டிக் கடன் வாங்க அவர் நெஞ்சம் இடந்தரவில்லை. இதனால் நிலக்கிழார் ஒருவரிடத்துக் கணக்கராகப் பணி புரிந்தார். ஒருவரின் கீழ் அடியாளாக இருந்து பணியாற்ற விருப்பமின்றி 1876-ஆம் ஆண்டு அப்பணியை விட்டார். கணக்கராகப் பணியாற்றியதே பெர்னாட்டு சாபார்த்த முதல் வேலையும் கடைசி வேலையும் என்று கூட கூறலாம். கணக்கர் வேலையை விட்டதும் இலண்டன் மாநகருக்குச் சென்றார்.

இலண்டன் மாநகருக்குச் சென்றது பற்றி பெர்னாட்டுசா கூறும் போது "அறிவியலோ, இசையோ எனது கலையாக இருந்திருந்தால் பெர்லினுக்கோ, இலிப்சிக்குக்கோ சென்றிருப்பேன். ஓவியக் கலையாக இடுந்திருந்தால் பாரிசுக்குச் சென்றிருப்பேன். சமயக்கலையாக இருந்திருந்தால் உரோமுக்குச் சென்றிருப்பேன். ஆனால் என் கலைக்கருவி ஆங்கில மொழியாக இருந்ததால் இலண்டனுக்குச் சென்றேன்" என்றார். பெர்னாட்டு சா ஒன்பது ஆண்டுகள் இலண்டனில் வறுமையால் வாடினார். எனினும் உள்ளம் தளராது ஐந்து ஆண்டுகள் முயன்று ஐந்து புதினங்கள் எழுதினார். ஆனால் அப்புதினங்கள் வெற்றியளிக்கவில்லை. அப்புதினங்கள் எழுதியதால் பெர்னாட்டு எழுதும் பயிற்சியைப் பெற்றார். புதினங்கள் எழுதுவதை விட நாடகங்கள் எழுதுவதே தமக்குச் சிறந்தது என்று பெர்னாட்டு சா நாடகத் துறையில் அடியெடுத்து வைத்தார்.

இலக்கியத் தொழிலுக்கு வந்ததுபற்றி பெர்னாட்டு சா கூறும் போது, "வழக்கறிஞராகவோ, வாணிகராகவோ, மருத்துவராகவோ, இருந்தால் மக்களிடம் நேருக்கு நேர் பழகவேண்டும். அதனால் உயர்ந்த உடைகளை அணிய வேண்டும். இலக்கியத் தொழிலிலோ அத்தொல்லைகள் இல்லை. ஒரு மூலையில் இருந்து கொண்டே மக்களுடன் பழகாமலேயே எழுதலாம்; ஆகவே சிறப்பான உடைகளும் தேவையில்லை. எனவேதான் நான் இலக்கியத் தொழிலுக்கு வந்தேன்" என்றார்.

நாடகம் எழுதுவதில் சா முதன் முதலாக ஈடுபட்டது 1890-ஆம் ஆண்டிலாகும். 'இல்லாள் இழந்தவரின் இல்லங்கள், (Widowers' Houses) என்பதே சாவின் முதல் நாடகம். ஆனால் அந்நாடகம் வெற்றியளிக்கவில்லை. 1894-ஆம் ஆண்டில் வெளி வந்த 'காண்டிடா' (Candida) என்ற நாடகமே, நாடக மேடையில் பெர்னர்டு சாவுக்கு வெற்றியைத் தேடித் தந்தது, அதன் பின்னர் 'மாந்தனும் உயர் மாந்தனும்' (Man and Super man) என்ற நாடகம் 1903-ஆம் ஆண்டில் வெளி வந்தது. இரு நாடகம் மேடையேறிய பின்தான் பெர்னர்டு சா நாடகத் துறையில் வெற்றியைக் கண்டார்.

சேக்சுபியர் 'துன்பியல்' நாடகங்கள் எழுதிப் புகழ் பெற்றார்; சா 'இன்பியல்' நாடகங்கள் எழுதிப் புகழ் பெற்றார். 'நாடகக் காட்சியில் இறப்புக்காட்சிகளைக் காட்டினாலன்றி சா சிறந்த நாடக ஆசிரியராகத் திகழ முடியாது' என்று குறை கூறினார், (வில்லியம்) ஆர்ச்சர். அக்குறையைப் போக்க சா, "மருத்துவரின் திண்டாட்டம்' என்ற நாடகத்தை எழுதினார். ஆனால் அந் நாடகத்தில் மருந்துவர்களும், இறப்புக் காட்சிகளுமே நிறைந்திருந்ததால் அந்நாடகமும் நகைச்சுவை நாடகமாகவே ஆகி விட்டது.

சா எந்தக் காட்சிகளையுமே நாடகமாகவே அமைத்தார். நாடகங்களாகவே எண்ணினார். 1925-ஆம் ஆண்டு சாவிற்கு இலக்கியத்திற்கான 'நோபல் பரிசு'' அளிக்கப்பட்டது. அப்பரிசுத் தொகையை சுவீடனுக்கும், இங்கிலாந்துக்கும் இடையில் கலைத் தொடர்பை அமைக்கக் கொடுத்து விட்டார்.

சா இலக்கியத் துறையில் வெற்றியடையுமுன் ஒருமுறை சொற்பெருக்காற்றிய போது கேட்டவர்கள் மூன்று சோம்பேறிகள். மற்றொரு முறை சா பேசியபோது கேட்டவர்கள் அவரைக் கண் காணிக்க அனுப்பப்பெற்ற ஆறு காவலர்கள். 1879-இல் சா சொற் போர் மன்றத்தில் சேர்ந்தார். முயற்சியெடுத்து மிகநன்றாகப் பேசக் கற்றுக் கொண்டார். சிறந்த சொற்பொழிவாளராகவும் விளங்கினார். அவரின் சொற்பொழிவை உலகமே கேட்டது. ஒருமுறை சா வுக்கு எதிராக அன்னி பேசண்ட் அம்மையார் பேசவிருந்தார்.

முதலில் சா பேசினர்.; கருத்துக் குவியல்களை அள்ளி வீசினர். கேட்டார் மனம் தொடுமளவு அவர் சொற்பொழிவு அமைந்தது. அடுத்து அன்னி பேசண்ட் அம்மையார் பேச எழுந்தார்.

'கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்" என்ற குறளுக்கேற்ப அன்னி பெசண்ட் அம்மையார் சாவின் பேச்சினுல் ஈர்க்கப்பட்டிருந் தார். அம்மையார் சா வுக்கு எதிராகவா பேசினர்? இல்லை. பெர் ஞர்டு சா வுக்கு உடன் பாடாகப் பேசினர்.

பெர்ஞர்டு சா சிறந்த நகைச்சுவையாளர். அவர் கூறும் நகைச் சுவைகள் சிரிப்பை அளித்தாலும் கருத்தெழுச்சியை அளிக்கக் கூடியது. அவரது நகைச் சுவையைப் பற்றி எழுதினுல் தனி நூலே வேண்டும். ஒரு சிறு நகைச்சுவையை மட்டும் காண் போம்: அறிஞர் செசுடர்டன் என்பவர் பருத்த உடலையுடையவர். சாவோ உடற் பயிற்சிகளால் தமது உடலைப் பருக்காமல் காத்துக் கொண்டவர். ஒரு முறை சாவைப் பார்த்து செசுடர்டன் 'உம்மை யாராவது கண்டால் இங்கிலாந்தில் வறுமைக் கொடுமை வந்திருப்பதாக எண்ணிக் கொள்வார்கள்' என்றார். உடனே சா அவரை மடக்கி, 'உம்மைப் பார்த்தால் வறுமை வந்ததற்கான கரணி யத்தையும் தெரிந்து கொள்வார்கள்' என்றார்.

பய்னெடவுன் செண்ட் என்னும் பெண் 1898-இல் சாவிற்கு செயலாளராக இருந்தார். 1898 சூன் முதல் நாளில் திருமணப் பதிவு நிலையத்தில் சாவிற்கும் - பாய்னெடவுனுக்கும் திருமணம் நடை பெற்றது. அப்பொழுது சா அழுக்கடைந்த உடைகளுடன், நொண் டிக் கொண்டே (அப்போதவர் கால் முறிந்திருந்தது) சென்றாராம். நாற்பத்தைந்து ஆண்டுகள் சாவுடன் வாழ்ந்த அப்பெண்மணி 1843-இல் இறந்ததும் சா தனிமையாகவே வாழ்ந்து வந்தார். தனிமையே இனிமை என்னும் கொள்கையுடையவர் சா.

சாவின் கருத்துக் குவியல்கள் புரட்சியின் திரட்சியாகவே இருக்கும். எண்ணி எண்ணிப் பார்க்க வேண்டியவை. எண்ண எண்ண அவர் கூறிய உண்மைகள் தெளிவாகும். அவரது கருத் தாழங்களில் சில: 'பள்ளிக்கூடம் என் உள்ளத்தைக் கவரவில்லை; எனவே நான் அங்குப் பயின்றது ஒன்றும் இல்லை. செயற்கை உடல் உழைப்பு உடலைக் கெடுப்பது போல, செயற்கையான

மூளை உழைப்பும் தீமையைத் தரும். விருப்பமின்றி மரத்தூளை வற்புறுத்தி உண்ணச் செய்வது போன்றதே செயற்கையான கல்வி முறையைத் திணிப்பது' என்றார்.

குற்றவாளிகளைச் சிறைப்படுத்தித் தண்டனைக் கொடுத்துத் தான் அவர்களைத் திருத்த முடியும் என்று எண்ணுவோர் பலர்; ஆனால் அவ்வாறெண்ணுவோரே குற்றவாளிகள் என்கின்றார் சா. 'குற்றவாளிகளைச் சிறைப்படுத்தித் தண்டனையினால்தான் திருத்த முடியும் என்று கூறுவது மடமை. இன்று உள்ளவாறு பார்த்தால் சிறைச்சாலையின் உள்ளே இருக்கும் குற்றவாளிகள் செய்த எந்தக் குற்றத்தையும் விடப் பெரியது, அவர்களைச் சிறைப்படுத்துவது ஆகும்' என்றார்.

செல்வத்தைக் குவித்து அதனால் வரும் இன்பத்தைப் பெறுவது நிலையற்றது. இதைச் சா, 'இன்பமும் துன்பமும் பணத்தை ஒட்டியவை. பணம் பசியைத்தான் போக்கும்! துன்ப உணர்ச்சியைப் போக்காது. உணவு பசியை மாற்றும்; ஆனால் இன்பத்தை அளிக்காது' என்றார்.

சா கூர்தல்அறக் கொள்கைகளையே நெறியாகக் கொண்டவர். கண் மூடி வழக்கத்தை எதிர்த்தார்; மூட நம்பிக்கைக்குப் பகைவர்; அவ்வழக்கங்களைக் கடுமையாக எதிர்த்து எழுதினார். அஞ்சாமை அவர் நெஞ்சம். 'உள்ளத்தில் கொண்டதை உலகிற்கு எடுத்தியம்ப வேண்டும்; தன் கடமையைத் தானே செய்ய வேண்டும்' என்பதே சாவின் கொள்கை.

'நான் எப்போதும் சாகத் தயங்கவில்லை; தயங்கவும் மாட்டேன்' என்று சாவே சாவைப் பற்றிக் கூறியுள்ளார். சாதலைப் பற்றி அஞ்சாதவர் அறிஞர் சா. 1950–ஆம்–ஆண்டு நவம்பர் முதல் நாள் விடியற்காலை ஐந்து மணியளவில் சாவின் உடல் அமைதி நிலை அடைந்தது. சாவின் வாழ்வே சாவா வாழ்வு; இனிய வாழ்வு; இன்ப வாழ்வு. சாவைப் போன்ற பெரியோர்கள் வாழ்வின் படிப்பினைகளே நமக்கு வழிகாட்டி; அவ்வொளி காட்டும் பாதையே நமது பாதை; துணிவென்னும் விளக்கேந்தி, அறிவென்னும் ஒளியேற்றி அவரின் பாதையில் நாம் நடக்க முயல்வோமாக!

'செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்? 0

முத்துமொழிகள்

* மாந்தன் தன் வாழ்நாள் முழுவதும் கற்றுக் கொண்டே இருக்கவேண்டும்; கற்க மறுப்பவன் வாழ மறுப்பவனாகிறான்.
—இராமகிருட்டிணர்

* அறிவுக்காக அறிவைப் பெறுவதை விட, தன்னைப் பயன் படுத்தி வளர்ப்பதற்காக அறிவை அடைவதுதான் கல்வியின் உண்மைப்பயன்.
—கன்பூசியசு

* தானே அறிவாளி என்று நினைக்கிறவனே பெரிய முட்டாள்.
—வால்டேர்

* கட்டளையிடக் கற்றுக்கொள்பவன் முதலில் பணிவதற்குப் பழக வேண்டும்.
—அரிசுடாட்டில்

* உயர்ந்த அறிவை அறிவுறுத்த முடியாது; அதை ஒவ்வோர் உள்ளொளியும் தனக்குத் தானே அடைய வேண்டும்.
—எமர்சன்

* அறிவாளி மற்றவரின் கேடுகளிலிருந்து பாடம் கற்றுக் கொள்ளுகிறான்; ஆனால் முட்டாளோ தனது கேடுகளிலிருந்து பாடம் கற்றுக் கொள்ளுவது வியப்பே.
—பிராங்க்ளின்

* பிழையை எடுத்துக் காட்டாமல் விடுவது தான் அறிவுத் துறையிலே ஒழுக்கமின்மையை வளர்ப்பதாகும்.
—கார்ல் மார்க்சு

* கற்காமலிருப்பதை விட பிறக்காமலிருப்பதே சிறந்தது; ஏனெனில் கல்லாமைதான் துன்பத்தின் ஆணி வேர்.
—பிளேட்டோ

* அறியாமையை விட கொடுமைத்தனம் வேறு எதுவுமில்லை
—இங்கர்சால்

* அறிவு அழிவு வராமல் காக்கும் கருவியாகும்; பகை கொண்டு அழிவைச் செய்பவர்க்கும், அழிக்க முடியா உள்ளரணும் ஆகும்.
—திருவள்ளுவர்

—தொகுப்பு: நா. மதிவாணன்—

தென்மொழி கடலூர்-1.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்:	9 உருபா.	10-50உருபா	14உருபா
அரையாண்டுக் கட்டணம்:	5உருபா	6 உருபா.	7-50
தனியிதழ்:	75 காசு	90 காசு	1-10

தொடர்: 3

பிழையில்லாமல் எழுதப் பழகுங்கள்!

பேரா. மு. வை. அரவிந்தன், கீ. க. மு.

5. பிழையும் திருத்தமும்

வல்லுநர், விடுநர், பெறுநர் – என்பவற்றை வல்லுனர், விடுனர், பெறுநர் என்று எழுதுவது பிழை. எந்தன் உந்தன் – என்பவை பிழையானவை. இவற்றை என்தன் (என்றன்) உன்தன் (உன்றன்) என்று எழுதவேண்டும்.

நஞ்சை, புஞ்சை என்ற சொற்களை நன்செய், புன்செய் என்று மாற்றி எழுத வேண்டும். வென்னீரை வெந்நீர் என்றும், இந்நாளை, இன்னுள் என்றும் எழுதக்கூடாது. சந்தனம் என்பதைச் சந்தணம் என்றும் சிலர் தவருக எழுதுகின்றனர். மாநிறம், மாநிலம், நானிலம் ஆகியவற்றை மானிறம், மானிலம், நாநிலம் என்று தவருய் எழுதுபவர் உண்டு. வெண்ணெய், எண்ணெய் ஆகியவற்றை வெண்ணை, எண்ணை என்று எழுதக்கூடாது. பதநீர் என்பது பதநி என்று மாறி பதனி என்று வழங்குகின்றது. குறுணை என்பதன் சரியான வடிவம் குறுநொய் என்பதாகும்.

இரும்பல், அக்கிள், தும்பல், விக்கல் என்பவற்றை இருமல் அக்குள் தும்மல் விக்குள் என்று திருத்தமாய் எழுதவேண்டும். அறிஞர் என்பவற்றை அறிஞ்சர் என்று சிலர் தவருக எழுதுகின்றனர். துகை துளிர் துடக்கம் துடை என்பவற்றைத் தொகை தளிர் தொடை என்று திருத்த வேண்டும்.

சாம்பிராணி என்பதைச் சாம்பராணி என்று எழுதக்கூடாது. கத்தரிக்கோல், கத்தரிக்காய் என்பவற்றைக் கத்திரிக்கோல் கத்திரிக்காய் என்று எழுதுவது பிழை. உத்திரவு என்பது பிழை. இதனை உத்தரவு என்று எழுதவேண்டும். தொந்திரவு என்பது பிழை. தொந்தரவு என்று திருத்தவேண்டும். சிகப்பு திகட்டாத என்பவற்றை சிவப்பு தெவிட்டாத என்று எழுதவேண்டும். மகிட்சி இகட்சி சுழட்டு கழட்டு என்பவற்றை முறையே மகிழ்ச்சி இகழ்ச்சி சுழற்று கழற்று என்று திருத்த வேண்டும்.

எண்ணுப் பெயர்களில் சில, தவருய் எழுதப் பெறுகின்றன. அரிக்கால் பனிரெண்டு முன்னூறு நாநூறு ஐநூறு தொளாயிரம்

என்பவற்றை அரைக்கால் பன்னிரண்டு முந்நூறு நாநூறு ஐந்நூறு தொள்ளாயிரம் என்று திருத்தமாய் எழுதவேண்டும்.

வேண்டாத இடங்களில் சொல்லின் நடுவே மெய் எழுத்தைச் சேர்ந்து விடுவதால் சில சொற்கள் பிழையாகின்றன. கோவூர் கிழார் காக்கை பாடினியார் என்னும் பெயர்களைக் கோவூர்க்கிழார் காக்கைப் பாடினியார் என்று எழுதக்கூடாது. மெய்க்காப்பாளர் என்பதை மெய்காப்பாளர் என்று எழுதவேண்டும். ஆத்திச்சூடி வாய்ப்பாடு ஒருக்கால் என்பவற்றை ஆத்திசூடி வாய்பாடு ஒருகால் என்று திருத்தமாய் எழுதவேண்டும். கோவையைக் கோர்வை என்றும், காத்து என்பதைக் கார்த்து என்றும் வெயிலை வெய்யில் என்றும் எழுதுவது பிழையாகும். நாகரீகம் என்பதை நாகரிகம் என்று திருத்தமாய் எழுதவேண்டும்.

சித்திரம் என்னும் சொல்லை அடிப்படையாகக் கொண்டு சித்திரித்தான் என்னும் சொல் வழங்குகின்றது. இதனைச் சித்தத்ரி தான் என்று எழுதுவது தவறாகும். செலவு என்னும் சொல்லில் செல் என்பது பகுதி. ஆதலின் சிலவு என்று எழுதுவது பிழை. மனதை என்பது தவறு. மனம் என்ற சொல் 'அத்து' என்னும் சாரியைப் பெற்று (மனம்+அத்து+ஐ) மனத்தை என்று வரும். இவ்வாறே அற்றுச் சாரியைப் பெற்று ஆறு+அற்று+ஐ ஆற்றை என்றும், தவறு+அற்று+ஐ தவற்றை என்றும் வரும். ழ் ர் ய் ஆகிய எழுத்துகள் நெடில் எழுத்தைப் பின் தொடர்ந்து வரும். குறிலின் பின் வராது. ஆதலின் கர்ப்பூரம் என்பது பிழை. இதனை கற்பூரம் என்றோ கருப்பூரம் என்றோ எழுதுவர்.

சுவறில், சுவற்றில் என்று எழுதுவது பிழை. 'சுவர்' என்பதே சொல். அதனுடன் 'இல்' சேர்ந்தால் சுவரில் என்றே வரும். இடறுற்றான் என்பது பிழை. இடர்+உற்றான் என்பவை சேர்ந்து இடருற்றான் என்று வரும். முயற்சித்தான் என்பது பிழை. இதனை முயன்றான் என்று திருத்தமாய் எழுத வேண்டும். 'முயல்' என் பது பகுதி. 'கேள்விமுயல்' என்பதில் அச்சொல் வந்துள்ளது. பயிற்சி என்னும் சொல்லைக் கொண்டு பயிற்சித்தான் என்று எழுதுவதில்லை; பயின்றான் என்றே எழுதுகிறோம். ஆதலின் முயன்றான் என்றே எழுத வேண்டும். புன்சிரிப்பு என்பதைக் கொண்டு புன்சிரித்தான் என்று தவறாக எழுதப்படுகின்றது. முகர்ந்

தான் என்பதை மோந்தான் என்று திருத்த வேண்டும். 'மோ' என்பது பகுதி. மோப்பம் மோப்ப மோந்து என்று பல சொற்கள் வழங்குகின்றன. என்னமோ என்பது பிழை. இதனை என்னவோ என்று திருத்த வேண்டும். என்ன + ஓ என்பது என்னவோ என்று தான் ஆகும். சில வடமொழிச்சொற்களையும் தொடர்களையும் நினைவில் கொண்டு, அவற்றைப் போலவே தமிழிலும் சிலர் படைத்து வருகின்றனர். அதனுல் பிழைகள் நேர்கின்றன. காட்சி மாட்சி என்பவை தமிழ்ச் சொற்கள். இவற்றிற்கு முறையே காண் மாண் என்பவை பகுதிகள். இவற்றை மறந்து காக்ஷி மாக்ஷி என்று பிழையாக எழுதுகின்றனர். தத்சமயம் என்னும் வடமொழித் தொடர் தற்சமயம் என்று மாறித் தமிழில் வழங்கும். இதனை நினைவில் கொண்டு தற்காலம் தற்போது ஆகிய தொடர்களை எழுதுகின்றனர். இவற்றை இக்காலம் இப்போது என்று எழுத வேண்டும். தனவந்தன் என்னும் வடசொல்லை நினைவில் கொண்டு செல்வந்தன் என்று எழுதுவது பிழை. செல்வன் என்ற சொல்லே அப்பொருளை உணர்த்தும். ஞாபகமறதி என்பதை மறதி என்றும், பாதுகாவல் என்பதைக் காவல் என்றும் எழுதலாம். ராஜாங்கம் என்பதை நினைவில் கொண்டு அரசாங்கம் என்ற சொல், தவருகப் படைக்கப்பட்டுள்ளது. அரசு அரசியல் என்றே வழங்க வேண்டும்.

ஒருவன் என்பதற்குப் பெண்பால் ஒருத்தி என்பதாகும். ஆனுல் ஒருவள் என்ற புதிய சொல்லைச் சிலர் படைத்து வழங்குகின்றனர். 'ஒருவன்–ஒருத்தி' என்ற வழக்கே பழைய நூல்களில் உள்ளது. நாட்டுப்புற மக்கள் பேச்சில் 'ஒருத்தி' என்ற சொல்லே இடம் பெற்றுள்ளது. அதுவே சரி. (தொடரும்)

தமிழ்ச்சிட்டு, கடலூர்-1.

(தனித்தமிழ்ச் சிறுவர் கலையிதழ்)

மாற்றப்பட்ட உறுப்பினர் கட்டணங்கள்

	உள்நாடு.	வெளிநாடு.	கொழும்பு.
ஆண்டுக்கட்டணம் உருபா	3-00	6-00	4-00
தனியிதழ் ,,	0-25	0-50	0-35

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஓரிதழுக்கு 50 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

தூவல்

தரங்கை — பன்னீர்ச்செல்வன்

தூவல், ஊற்றுத் தூவல் - எழுதத்
துடிக்கும் ஊற்றுத் தூவல்!
ஆவல் பலரும் கொண்டிட - பைக்குள்
அடங்கிக் கிடக்கும் தூவல்!

மிக்க கூர்மை சான்றது -உணர்வை
மீட்டும் யாழைப் போன்றது!
பக்கம் பலவே கண்டிடும்-மையைப்
பசிக்கே உணவாய்க் கொண்டது!

எண்ணம் தன்னை ஏட்டிலே-நாளும்
எழுதித் திறனைக் காட்டிடும்!
வண்ணம் மையின் வண்ணமே அறிவை
வளரச் செய்யும் திண்ணமே!

அறிஞர் கையில் கொஞ்சிடும் - சிறுவர்
அன்புக் கைக்கே அஞ்சிடும்!
வறிஞர் தமக்கும் உழைத்திடும் கருத்தை
வடித்தே உலகை அழைத்திடும்!

ஓலை நறுக்குப் போனதும் - விரைந்தே
உலகம் எழுத லானதும்
வேலை செய்யப் பிறந்தது - உள்ளம்
விளக்கிக் காட்டச் சிறந்தது!

ஏற்றம் கொள்ளும் நாட்டிலே - புலவர்
எழுதும் தமிழப் பாட்டிலே
மாற்றம் காட்டும் தூவலே - பனுவல்
மலரும் தமிழின் ஏவலே!

'நறுந்துணர்' எனும் அவர் நூலினின்றெடுத்தது.

தமிழ்ச் சொல் வளம்.

முதிர்ச்சி வகைகள்:

பழுத்தல் — மா, வாழை முதலியவற்றின் காய் முதிர்ச்சி
முற்றல் — சுரை, பூசணி ,, ,,
நெற்று — தேங்காய், பீர்க்கு ,, ,,
விளைச்சல்— நெல், சோளம் ,, ,,

காய் கனிக் கேட்டு வகைகள்:

சூம்பல் – நுனியில் சுருங்கிய காய்.
சிவியல் – சுருங்கிய பழம்
சொத்தை – புழு பூச்சி யரித்த காய் அல்லது கனி
வெம்பல் – சூட்டினால் பழுத்த பிஞ்சு
அளியல் – குளுகுளுத்த பழம்
அழுகல் – குளுகுளுத்து நாறிய பழம் அல்லது காய்
சொண்டு – பதராய்ப் போன மிளகாய்
கோட்டான்காய் அல்லது கூலைக்காய் } கோட்டான் உட்கார்ந்ததினால் கெட்ட காய்
தேரைக்காய் – தேரையமர்ந்ததினால் கெட்ட காய்
அல்லிக்காய் – தேரையமர்ந்ததினால் கெட்ட தேங்காய்
ஒல்லிக்காய் – ஒருவர் தமித்து இளநீர் குடித்த தென்னையிற் கெட்ட காய்

காயின் காம்பிதழ் வகை:

இதக்கை – தேங்காய், பனங்காய் முதலியவற்றின் காம்பிதழ்
சொங்கு – சோளத்தின் காம்பிதழ்

பழத்தோல் வகை:

தொலி – மிக மெல்லியது; தோல் – திண்ணமானது
தோடு – வன்மையானது; ஓடு – மிக வன்மையானது
குடுக்கை – சுரையின் ஓடு.
மட்டை – தேங்காய் நெற்றின் மேற் பகுதி
உமி – நெல், கம்பு முதலியவற்றின் மூடி
கொம்மை – வரகு கேழ்வரகு முதலியவற்றின் உமி.

(தொடரும்)

(பாவாணர்—சொல்லாராய்ச்சிக் கட்டுரை)

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1, தமிழகம்.